**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 152/2021 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.3 |
| Name | : | திரு. சபரிநாத் |
| Father's Name/Husband Name: | | திரு. ராமநாதன் |
| Village | : | தழுதாழை |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 33 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 02.12.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. லட்சுமணபெருமாள் , இளநிலை உதவியார் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 2 ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 எனது பெற்றோர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 09.08.2021ம் தேதி அன்று நான் தழுதாழையில் உள்ள எனது வீட்டில் இருந்த போது மதியம் 1.30–1.45 மணிக்குள் எனது பெற்றோருக்கு வயலில் அடிப்பட்டு இருப்பதாக தொலைபேசியில் தகவல் சொன்னார்கள். நான் வயலுக்கு சென்று பார்த்த போது என்னுடைய பெற்றோர்கள் இருந்தார்கள். என்னுடைய தாயாரின் இரண்டு கையின் மணிக்கட்டு பகுதியில் அடிப்பட்டு நிமிர்த்த இயலாத நிலையில் இருந்தார். மேலும் அவர் அழும் நிலையில் இருந்தார். எனது தந்தை மார்பு மற்றும் வயிற்று பகுதியில் அடிப்பட்டு இருப்பதாக சொன்னார். நான் என்ன நடந்தது என்று எனது பெற்றோரிடம் கேட்ட போது எங்களுடைய மேட்டு வயலுக்கு வடபுறமுள்ள வயலில் சோளப்பயிர் மாடு கட்டி வண்டி ஓட்டி வந்த போது எங்கள் வறப்பு சேதமடைந்ததாகவும் எனது தந்தை வீட்டிற்கு வந்து கொண்டிருந்ததாகவும், எனது தாயார் பின்னால் வந்ததாகவும் எனது தந்தை எதிரி

ராஜ்குமாரிடம் வயலை சேதப்படுத்தி ஓட்டுவது சம்மந்தமாக கேட்டதாகவும், எதிரி வயலில் பார்த்து ஓட்டுமாறு சொன்னபோது பின்னால் வந்த என்னுடைய தாயார் அ.சா.1னினை பார்த்து சோளப்பயிர் சேதப்படுத்தியது சம்மந்தமாக கேட்ட போது சமாதியில் அமர்ந்திருந்த 1ம் எதிரி அங்கு வந்து அப்படி தான் ஓட்டுவோம் என்று சொல்லி எனது அம்மாவின் இரண்டு கைகளையும் பிடித்து அடித்ததாகவும், பின்னர் எனது தந்தை சம்பவத்தை விலக்கிவிட வந்த போது அ.சா.2 கீழே தள்ளியதாகவும், சாட்டை குச்சியால் ராஜ்குமார் என்பவர் அ.சா.1, அ.சா.2யையும் அடித்ததாகவும், எனது தாயார் வலி தாங்காமல் தடுத்தபோது இரண்டு கையிலும் அடித்ததாகவும் பின்னர் எனது தந்தையையும் தொடர்ச்சியாக அடித்ததாகவும் பக்கத்திலிருந்த நபர்கள் வந்து கீழே உள்ள நபர்களை தூக்கிவிட்டதாகவும் சொன்ன தகவலின்பேரில் பின்னர் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி காயம் பட்ட இருவரையும் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் M.E., படித்துள்ளேன். சென்னையில் Softward Engineer ஆக பணி செய்கிறேன். சம்பவம் நடக்கும்போது நான் Work from Home செய்து கொண்டிருந்தேன். எனக்கு யார் மூலமாக தகவல் கிடைத்தது என்றால் பக்கத்து வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் சொன்னார்கள். அவர்கள் விவரம் ஏதேனும் கேட்டுத் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 2ம் எதிரி மாடு கட்டி உழவு ஓட்டி சோளப்பயிர் விதைத்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். சம்பவத்தன்று எங்கள் வயலில் இருந்த சோளப்பயிர் எவ்வளவு அடி உயரம் இருக்கும் என்றால் சுமார் 2 அடி உயரம் இருக்கும். எங்களுக்கும் எதிரிகளுக்கு வீட்டிற்கு போகிற பாதை சம்மந்தமாக முன்விரோதம் இருக்கிறது என்றால் சரிதான். முன்விரோதம் காரணமாக தான் நடந்த சம்பவத்திற்கு மாறாக எதிரிகளின் மீது எனது தாயார் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சம்பவத்தை ரோட்டில் வந்தவர்கள் விலக்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல. புகாரில் அவ்வாறு சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். சம்பவம் குறித்து நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு செல்லும்போது எதிரிகள் அங்கு இல்லை என்றால் சரிதான். எனது தந்தை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான் ஆனால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார். சிகிச்சை பெற்றதற்கான

ஆவணங்களை காவல் துறையினரிடம் விசாரணைக்காக கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கிற்காக எனது தந்தை சிகிச்சை எடுத்துக் கொண்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் நான் மருத்துவமனையில் இருக்கும்போது என்னை விசாரணை செய்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.